நேரம் இருந்தால். நான் என் மனச்சாட்சிப் பிரகாரம் சொல்கிறேன். அந்தமாதிரி என்னைப் பேச விட்டிருந்தால் கருத்து வேறுவிதமாக மாறியிருக்கும். அதற்கான காரணங்களை விளக்கியிருக்கிறேன். இதன் மீது எந்தக் கருத்தையும் நான் சொல்ல விரும்பவில்லை. சபாநாயகர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்க விரும்புகிறார்களோ அந்த நடவடிக்கைகள் எடுப்பதைப் பற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மேல் உள்ள தீர்ப்பை நான் திங்கட்கிழமை அன்று கூறுகிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 41-வது விதியின்கீழ் உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் நிதி அமைச்சர் அவர்களின கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒற்றிவைக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அதை ஒற்றிவைக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

முப்பிலிப்பட்டி கிராமக் கோவில் கிணற்றிலிருந்து அரிசனங்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எம். முத்தையா அவர்கள் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர உடனடி பொது முக்கியம் வாய்ந்தக் காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. மு. முத்தையா : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், ஒட்டப்பிடாரம் உபவட்டம், முப்பலிப்பட்டி கிராமத்தில் கோவில் கிணற்றில் மற்ற இனத்தாரைத் தண்ணீர் எடுக்க அனுமதிக்கும் அக் கோவில் அர்ச்சகர் அரிசனங்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்காதது பற்றியும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுபற்றியுமான அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த முப்பிலிப்பட்டி சிற்றூரில் 150 அரிசனங்கள் வீடுகளும் யாதவர் வகுப்பைச் சேர்ந்த சாதி இந்துக்களின் 80 வீடுகளும் உள்ளன. கோயில் புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ள அரசு நிலத்தில் அமைந்த காமாட்சியம்மன் கோயில் என்கிற கோயில் ஒன்று உள்ளது. மதுரை. ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இக்கோயில் தெய்வத்தை வழிபட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. திரு. சக்கரை நாடார் என்பவர் இக்கோயிலின் பூசாரியாக இப்போது பணிபுரிந்து வருகிறார். இந்த சிற்றூரிலுள்ள 4 அல்லது 5 குடிநீர்க் கிணறுகளைவிடச் சிறந்த குடி நீரைத்தரும் வகையில் இக் கோயிலில் குடி நீர்க கிணறு ஒன்றுள்ளது. அரிசனக் குடியிருப்பில் மற்றொரு குடிநீர்க் கிணறு உள்ளது. ஆனால் இந்த நீர் சற்று உப்புகரிப்பதாகச் சொல்லப் படுகிறது. இக் கோயில் கிணற்றிலிருந்து நீண்டகாலமாகவே வீட்டுக் காரியங்களுக்காக அரிசனங்கள் நீர் எடுத்துவருவதாகச் சொல்லப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாடார் வகுப்பு மக்கள் இக்கோயிலையும் கிணற்றையும் அடைத்துச் சுற்றுச்சுவர் ஒன்று கட்டினார்கள்; பின்னர் இச்சுற்று சுவரிற் கதவும் அமைக்கப்பட்டது. இக் கிணற்று நீர் பூசைக்குப்